செ.வெ.எண்: 7 நாள் : 17.3.2023

<u>**பத்திரிக்கை செய்தி**</u>

திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.3.2023) மண்டலம்-3, வார்டு- 33, மண்ணரை பகுதியில் உள்ள அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் மூலிக் குளம் புனரமைக்கும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பூர் மாநகராட்சி, அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.59.50 லட்சம் மதிப்பீட்டில், மண்டலம்-3, வார்டு-33, மண்ணரை பகுதியில் மூலிக்குளம் புனரமைப்பு பணி மற்றும் சிறப்பு நிதியின் கீழ் ரூ.16.00 லட்சம் மதிப்பீட்டில் மூலிக்குளத்தை சுற்றி கம்பிவேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

முன்னதாக, மாநகராட்சி ஆணையாளர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் (16.3.2023) அன்று மண்டலம்-4, வார்டு- 36, நஞ்சப்பா ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.38.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பொதுக் கழிப்பறையினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் உதவி ஆணையர் திரு. பி. வாசுகுமார், வேர்கள் அமைப்பு திரு.சந்தீப் மற்றும் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி.**

